தமிழ்நாடு சட்டமன்றம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்டமனறத்தின் நாற்பத்திரண்டாவது கூட்டத் தொடர்.

புதன்கிழமை, 1972 ஆகஸ்ட் 23.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில், மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்டமன்றம் கூடியது.

1. இரங்கற் குறிப்பு

சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. கே. தங்கவேல் முதலியார் இயற்கை எய்தியது குறித்து.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. கே. தங்கவேலு முதலியார் அவர்கள் 22—8—1972-ல் காஞ்சிபுரத்தில் இயற்கை எய்தினார் என்பதை நான் இந்த அவைக்கு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தங்கவேலு முதலியார் 1960–66-ல் சட்ட மன்ற மேலவை உறுப்பினராக இருந்தார். அவர் செங்கற்பட்டு மாவட்ட வாரியத்தில் உறுப்பினராகவும் காஞ்சிபுரம் நகராட்சி உறுப்பினராகவும், துணைத் தலைவராகவும் தலைவராகவும் இருந்தார். குறிப்பாகக் கூட்டுறவு இயக்கத்தில் அவர் மிகுந்த அக்கறை காட்டினார்.

அன்னாரின் பிரிவினால் வாடும் குடும்பத்தாருக்கு நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தை இந்த அவையின் சார்பில் தெரிவிக்கிறேன்.

அன்னாரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இரண்டு நிமிடங்கள் அமைதியாக எழுந்து நிற்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

[அவையினர் எல்லோரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றார்கள்.]